பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 25 ஞாயிற்றுக்கிழமை 09.03.2025 | அதிர்வு 218

## தான நிகழ்வில் ஒருவர் கொலை

தான நிகழ்வொன்றில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் வரக்கா பொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# அநுர அலையை குறைத்து மதிப்பிடாதீர்!



## கொழும்பில் இம்முறை போட்டியிடுவதில்லை என்று தமிழரசின் மத்திய குழு தீர்மானம் என்கிறார் சுமந்திரன்

(கி.வசந்தன்)

“அநுர அலை இன்னும் குறையவில்லை. அதனை குறைத்து மதிப்பிட முடியாது. அத்துடன் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதில்லை” என்று தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச் செயலாளருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று காலை முதல் மதியம் வரை வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. அதன் பின் வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதியில் கட்சியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டு ஊடக சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பாக மட்டுமே ஆராயப்பட்டது. கட்சியின் மத்திய செயற்குழு உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பான தீர்மானங்களை ஏகமனதாக எடுத்துள்ளது. அதன்படி வடக்கு – கிழக்கு மாவட்டங்களின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடும்.

இந்த தேர்தல் முக்கியமானதொரு தேர்தல். நாங்கள் ஒவ்வொரு தேர்தல்களையும் முக்கியமானதொரு தேர்தல் என்றே கூறி வந்துள்ளோம். உண்மை அது தான். ஒவ்வொரு தேர்தல்களில் அவ்வக் காலப்பகுதிகளில் வேறு வேறு நோக்கங்களுக்காக முக்கியமான தேர்தலாக இருக்கும். இம்முறை நாடு அனுர அலையில் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தனிப் பெரும்பான்மையை பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு 02 ▶

# 2030இல் நாமல்தான் ஜனாதிபதியாம்

## இப்படிக் கூறுகின்றது மொட்டுக் கட்சி



2030 ஆம் ஆண்டளவில் இலங்கையில் ஜனாதிபதியாக நாமல் ராஜபக்ஷ தெரிவாவதை தேசிய மக்கள் சக்தியால் மட்டுமல்ல எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஆளுங்கட்சியால் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். இதனால் மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். தேர்தல் பெறுபேறு வெளியாகும்போது இதனை அறியமுடியும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எமது அணி வெற்றிகரமாக எதிர்கொள்ளும். மக்கள் எமது பக்கம் உள்ளனர். அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து வெளியே சென்றவர்கள் மீள இணைவார்கள் என நம்புகின்றோம்.

அதேவேளை, இந்த நாட்டில் உள்ள சிறந்த எதிர்கால தலைவர் நாமல் ராஜபக்ஷதான். 2030 ஆம் ஆண்டாகும்போது அவர் ஜனாதிபதியாவதை தேசிய மக்கள் சக்தியால் மட்டுமல்ல எந்தத் தரப்பாலும் தடுக்க முடியாது.” – என்றார்.

# அநாகரிகமாக நடந்துகொண்ட யூடியூப்பர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் வீட்டினுள் இரவு வேளை நுழைத்து அநாகரிகமாக நடந்து கொண்ட யூடியூப்பர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வறியவர்களுக்கு உதவி செய்வதாகப் புலம்பெயர் தமிழர்களிடம் நிதியைப் பெற்று, அதன் ஊடாக உதவி செய்வது போன்றன காணொளிகளை தனது யூடியூப் தளத்தில் பதிவேற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் பாடசாலை மாணவி ஒருவரின் வீட்டுக்கு இரவு வேளை சென்ற மேற்படி நபர்,



பாடசாலை மாணவியைக் காணொளி எடுக்க முற்பட்டுள்ளார். அதற்கு மாணவி மறுப்புத் தெரிவிக்கவே காணொளியில் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

குறித்த காணொளி சமூக வலைத் தளங்களில் பரவியதை அடுத்து பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களைத் தெரிவித்து இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவ்வாறு உதவி செய்பவர்களின் நிதி கையாடுகைகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கோரி வந்தனர்.

இந்நிலையில், குறித்த வீட்டுக்கு இன்று சென்ற யூடியூப்பர் காணொளி எடுக்க முற்பட்ட நிலையில் அப்பகுதி மக்கள் யூடியூப்பரை பிடித்து இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

# வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்த முயற்சித்த கிரிக்கெட் வீரர் கைது!



பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலமுன்ன பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து நபர் ஒருவரைத் தாக்க முயன்ற கிரிக்கெட் வீரர் அஷேன் பண்டார கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய நேற்று சனிக்கிழமை இவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அஷேன் பண்டார பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், புதன்கிழமை கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முறைப்பாடு அளித்த நபர் அஷேன் பண்டாரவின் பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். அஷேன் பண்டாரா காரை வீதியை மறைக்கும் வண்ணம் நிறுத்தியமையினால் இருவருக்கும் தகாராறு ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தான நிகழ்வில்...**

எத்னாவல பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வரக்காபொல – எத்னாவல பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய வராவார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், உயிரிழந்தவர் தனது சகோதரரின் வீட்டில் நடந்த ஒரு அன்னதான நிகழ்வில் கலந்துகொண்டு வீடு திரும்பிய போது, அயல்வீட்டாருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் விளைவாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

மேலும், கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, சந்தேகநபரைக் கைது செய்ய வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

**அநுர அலையை...**

தவிர ஏனைய மாவட்டங்களில் அநுர அலையில் எமது மக்களின் வாக்குகள் சென்றுள்ளது. திருகோணமலையில், மட்டக்களப்பில் நாம் பெரும்பான்மை பெற முடியாது. வடக்கில் நாம் தான் பெரும்பான்மை. எனினும் மக்கள அநுர அலையில் சிக்கி ஜனாதிபதி தேர்தலைக் காட்டிலும் நாடாளுமன்ற தேர்தலில் அதிக வாக்குளை வழங்கியிருந்தார்கள். ஜனாதிபதித் தேர்தலில் நாம் ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாச அவர்களே வடக்கு – கிழக்கில் பெரும்பான்மை பெற்றார். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் இந்த நிலை மாறியது.

தற்போது அநுர அலை குறைந்து விட்டது என்கிறார்கள் சிலர். அப்படி கூற முடியாது. அநுர அலை தற்போதும் இருக்கிறது. அது குறைவடைய சில காலம் செல்லலாம். நாம் கவனமாக கையாண்டு நாடு அநுரவோடு இருக்கட்டும். நமது ஊர் நம்மோடு. நாம் வீட்டோடு என செயற்பட வேண்டும்.

எமது உள்ளூர் அதிகாரங்களை நாம் விட முடியாது. எனவே நாம் இந்த தேர்தலில் சிறப்பானவர்களை, செல்வாக்கு மிக்கவர்களைநிறுத்தவேண்டும். அதன்மூலமே அதிக வெற்றி வாய்ப்பை பெற முடியும். அவ்வாறான தீர்மானங்கள எடுக்கும் அதிகாரம் எமது மாவட்ட கிளைகளுக்கு வழங்கியுள்ளோம்.

தேர்தல் முடிந்த பின் ஆட்சி அமைக்கின்ற போது ஏனைய தமிழ் கட்சிகளுடனும் பேசி ஆட்சி அமைப்பதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில சபைகளின் நிலமையை கருத்தில் கொண்டு ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடலாம் என தீர்மானித்துள்ளோம். அந்தவகையில் வவுனியா வடக்கு, சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கான தமிழரசுக் கட்சியின் வாசல் திறந்தே உள்ளது.

வவுனியா வடக்கில் நாம் பிரிந்து செயற்படுவோமாக இருந்தால் பெரும்பான்மையினரிடம் அப் பிரதேச சபை செல்லும் வாய்ப்புள்ளது. சம்மாந்துறை, ஏறாவூர் ஆகிய பகுதிகளில் எம்மிடம் பெரும்பான்மை இல்லை. ஆகவே இணைந்து போட்டியிடலாம் என தீர்மானத்துள்ளோம்.

கொழும்பு மாநகர சபையில் தமிழ் மக்கள் வசிக்காத வட்டாரங்களும் உள்ளது. அங்கு வேட்பாளர்களை நியமிப்பது சவாலான ஒரு நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. அங்கு ஏனைய கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டாலும், அதன் வேட்பாளர்களின் பின்புலம் தொடர்பாக ஆராய்வதில் பல்வேறு சவால்கள் உள்ள காரணத்தினால் இம்முறை கொழும்பில் போட்டியிடுவதில்லை என மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது" – என்றார்.

# ஹெரோயினுடன் 21 வயது பெண் கைது!



21 வயதுடைய இளம் பெண் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

திவுலபிட்டிய – ஹொரகஸ்முல்ல பகுதியைச் சேர்ந்த பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண்ணிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி சுமார் 2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா எனப் பொலிஸ் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் சிறிது காலமாகக் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டு வந்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், கைது செய்யப்பட்ட மேற்படி பெண் ஹெரோயினுடன் மினுவாங்கொடை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர், மார்ச் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



# தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளர் பெயர் அறிவிப்பு!

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளராக விரோய் கெலீ பல்தசார் களமிறக்கப்படவுள்ளார்.

ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார் என இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அபத்த அரசியல்

முன்னைய அரசுகளின் காலத்தில் இடம் பெற்றவை என்று கூறப்படும் ஊழல்கள், மோசடிகள், தவறுகள், வன்முறைகள் குறித்து நீட்டுப் பட்டோலை வாசித்துக் குற்றச்சாட்டுகளை அடுக்கி, அதில் அரசியல் செய்வதைத் தவிர, கடந்த நான்கு, ஐந்து மாத கால ஆட்சியில் உருப்படியாக எதுவுமே செய்யாத தேசிய மக்கள் சக்தி அரசின் வாயில் மெல்லுவதற்கு இப்போது இன்னும் ஒரு விடயம் கிடைத்திருக்கின்றது. இனி என்ன, அதையும் வைத்து சில மாதங்கள் காலத்தை ஓட்டுவார்கள் என்று நம்பலாம்.

சர்ச்சைக்குரிய அல் ஜஸீரா பேட்டியின் போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்க்ரமசிங்க மீது அந்த செய்தியாளர் தொடுத்த பட்டலந்தை ஆணைக் குழு அறிக்கை பற்றிய சர்ச்சையை மீண்டும் தூக்கிப் பிடித்திருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசு.

முன்னைய அரசுகள் - அதிகாரத்தில் இருந்த தரப்புகள் மீது - புராணி பாடுவதைத் தவிர இந்த அரசு இது வரையில் பிரயோசனமாக எதையும் செய்ததாகத் தெரியவில்லை.

1994 ஆம் ஆண்டு ஐ.தே.க. ஆட்சி அதிகாரத்தை இழந்த பின்னர் கடந்த 31 ஆண்டுகளில் சொற்ப காலம்தான் ரணில் விக்கிரமசிங்க ஆளும் தரப்பில் அமர்ந்திருந்தார். அவரது தலையெழுத்தோ என்னவோ அவரும் அவரது கட்சியும் பெரும்பாலும் எதிரணியில் அமர்வது தான் வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. அப்படி எதிரணியில் இருந்த சமயத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், இப்போது அல் ஜஸீரா செய்தியாளர் எடுத்துப் பேசிய விடயத்தை தங்களின் கைகளில் பற்றி கொண்டு அடுத்த தரம் வாய்ச் சவடால் அரசியலுக்கு ஆளும் தரப்புத் தயாராகிவிட்டது.

1994 இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட மேற்படி பட்டலந்தை விசாரணை ஆணைக்குழு அதற்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் பட்டலந்தை வீடமைப்பு திட்டத்தில் செயல்பட்டதாகக் கூறப்படும் சித்திரவதை முகாம் பற்றிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தது. 1997 ஆம் ஆண்டு சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த போது அந்த ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்பட்ட நிலையில் கிடப்பில் போடப்பட்டு விட்டது.

அதைத் தூக்கிப்பிடித்து இப்போது பேசத் தொடங்கி இருக்கிறது தேசிய மக்கள் கட்சி அரசு. அந்த ஆணை குழு அறிக்கையை அம்பலப்படுத்துவது குறித்து வரும் அமைச்சரவையில் ஆராயப்படும் என்றும் அரசு தரப்பு பேச்சாளர்கள் ஆரவாரமாக கூறுகிறார்கள்.

1997 - 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோடு, அரசியல் ரீதியாக பெரும் எதிர்ப்பு நிலையில் இருந்தவர் எதிர்க்கட்சித் தலைவராகச் செயலாற்றிய ரணில் விக்கிரமசிங்க. சந்திரிகா குமாரதுங்க தன்னுடைய முழு முயற்சியில் 2000 ஆம் ஆண்டில் கொண்டு வந்த புதிய அரசமைப்பு சீர்திருத்தத்தை, அதன் நகலை நாடாளுமன்றத்துக்குள் எரித்துக் குழப்பி அடித்த ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கட்சி மீது சந்திரிகா கடும் காட்டத்தில் இருந்தார்.

பட்டலந்தை விசாரணை ஆணைக்குழு அறிக்கை போன்றவை ரணிலுக்கு எதிரான காட்டமான அம்சங்களை கொண்டிருந்திருக்குமானால் அதை அப்போதே சந்திரிகா மிகத் தந்திரமாகவும் சாதுரியமாகவும் தனக்குச் சாதகமாக பயன்படுத்தி இருப்பார்.

தாம் அரசியலை விட்டு ஒதுங்கிய பின்னர் சந்திரிகா தமது அரசியல் எதிரியான ரணிலுடன் மாத்திரம் அல்ல, மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட ஒரு கௌரவமான நட்புறவு நிலைப்பாட்டையே பேணுகிறார். இப்போதைய அந்த நிலையைக் காரணம் காட்டி, 1997 இல் பட்டலந்தை ஆணைக்குழு அறிக்கையை கிடப்பில் போட்டு, ரணிலை சந்திரிகா காப்பாற்றினார் என்று இப்போது ஆளும் தரப்புக் கதை விடுவது பெரும் அபத்தம்.

பட்டலந்தை ஆணைக்குழு அறிக்கை மூலம் அங்கு இடம் பெற்ற சித்திரவதை போன்றவை குறித்து விசாரிக்கத் தூண்டும் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு, யுத்தத்தின் முடிவில் பல்லாயிரம் தமிழர்களுக்கு எதிராக மோசமாக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மட்டத்தில் கண்டறியப்பட்ட விடயங்களை ஆராய்ந்து நீதி செய்யும் - நியாயம் செய்யும் - மனப்பக்குவம் இல்லை.

அரசியல் எதிரியான ரணிலுக்கு எதிராகப் பழைய - புதைந்து போன - ஆணைக்குழு அறிக்கைகளை கிளறி எடுத்து அரசியல் செய்ய முற்படுவது அபத்தம்.



# கற்பிட்டி பிரதேச செயலாளருக்கு பிரியாவிடை

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலாளராக சுமார் ஒரு வருட காலம் தற்காலிக இணைப்பு செய்யப்பட்டிருந்த எஸ். மிளங்க பிரபாத் நந்தசேன , கற்பிட்டி பிரதேச செயலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்று செல்கின்றார்.

இதனை முன்னிட்டுக் கற்பிட்டி பிரதே செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் பிரியதர்ஷினி தலைமையில் செயலாளருக்கான பிரியாவிடை நிகழ்வு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கற்பிட்டி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.





# வடக்கு - கிழக்கை இணைக்கும் கொக்கிளாய் பாலத்தை அமையுங்கள்

## அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

வடக்குமாகாணத்தின் முல்லைத்தீவையும், கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையையும் இணைக்கும் கொக்கிளாய் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு தனது கோரிக்கையை ஏற்று 2025 ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்டத்தில் வட்டுவாகல் பாலத்தை அமைப்பதற்கு முதற்கட்டமாக ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியமைக்கு அமைச்சர் விமல் ரத்நாயக்கவுக்குத் தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அமைச்சரிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.



இதன்போது ரவிகரன் எம்.பி. மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உங்களுடைய பாரபட்சமின்மை எல்லோரையும் அணைத்துக்கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணம் மிக மிக, பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன். நிதிஒதுக்கீடுகள் பூரண திருப்தி, முள்ளிவாய்க்கால் கிழக்குகிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலம் நிறைவேற்றி விட்டீர்கள். ஜனாதிபதிக்கும், உங்களுக்கும் மனம் நிறைவான நன்றிகள்.

இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகளை துரிதமாக முன்னெடுக்கவும், இந்த வருடத்துக்குள் இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்துக்கான வேலைத்திட்டங்கள் பூரணப்படுத்தவும் உங்களுடைய ஆதரவு முழுமையாகத் தேவை.

அடுத்து இப்போது ஒருமுக்கியமான கோரிக்கையை உங்களிடம் கொண்டு வருகின்றேன். அடுத்த வரவு – செலவுத் திட்டத்திலோ அல்லது, அதற்குமுன் பொருத்தமாக நிதிகிடைக்கும் பட்சத்திலோ இந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை தாருங்கள்.

முல்லைத்தீவு – கொக்கிளாயிலிருந்து, திருகோணமலை – புல்மோட்டை வரையிலான இரண்டு மாவட்ட மக்களதும் கனவை நிறைவேற்றுங்கள்.

இது அதிகமான சுற்றுலாப் பயணிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். இந்தப் பாலம் கொக்கிளாய் நீரேரியூடாக அமைப்பதால் மிகவும் குறுகிய நேரத்தில் பயணம் செய்வதற்கு உதவ முடியும்.

நாட்டின் முன்னேற்றத்துக்கான வகையில், ஆலோசனை வழங்குவதில் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எமக்கும் பொறுப்பு உண்டு. இந்தப் பாலம் அமைப்பதால் இரண்டு மாவட்ட மக்களுடையதும் கோரிக்கையை நிறைவேற்றுவதாக அமையும். சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் இந்தப் பகுதிகளுக்கு வருவது நாட்டின் வருவாய்க்கும் உதவும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. – என்றார்.



# திருமலையில் துறைமுக அதிகார சபை கையகப்படுத்திய காணிகளை மக்களிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்!

## நாடாளுமன்றில் சண்முகம் குகதாசன் எம்.பி. தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை துறைமுக அதிகார சபை கையகப்படுத்தி வைத்துள்ள காணிகளை மக்களிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் வரவு – செலவுத் திட்ட விவாதத்தின் போது கோரிக்கை விடுத்தார்.

அவர் தமது உரையில் தெரிவித்துள்ளவை வருமாறு,

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் தொடர்பாக எனது கருத்துகளை இந்த அவையில் எடுத்துரைக்க விழைகின்றேன்.

இந்த நாட்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், நீர்ப்பாசன திணைக்களம் என்ற துறைகளின் கீழ் வீதிகள் காணப்படுகின்றன. இவற்றின் நீளம் அண்ணளவாக 119,000 கிலோ மீற்றர் ஆகும்.

நான் பிரதிநிதித்துவப் படுத்தும் திருகோணமலை மாவட்டம் உள்ளடங்கும் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வீதிகளின் மொத்த நீளம் அண்ணளவாக 10,600 கிலோ மீற்றராக உள்ளது.

கிழக்கு மாகணத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 11 வீதமான வீதிகளும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் 12 வீதமான வீதிகளும்உள்ளூராட்சித்திணைக்களத்தின் கீழ் 45 வீதமான வீதிகளும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் 15 வீதமான வீதிகளும் பிற திணைக்களங்களின் கீழ் 17 வீதமான வீதிகளும் காணப்படுகின்றன.

இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு 52.4 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவுக்காகவும் 421 பில்லியன் ரூபா மூலதன செலவுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 13 வீதத்தால் அதிகமாகும். இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். எனினும் வீதி அபிவிருத்திக்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை விட இந்த ஆண்டு ஒதுக்கீடானது 13 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம் அல்ல.

வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெருமளவான நிதி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் காணப்படும் 10 வீதமான பெருந்தெருக்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அத்துடன் ஐ நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பல வீதிகள் முடிக்கப்படாமல் இடை நடுவே கைவிடப்பட்டுள்ளன. இதன்




காரணமாகப் பல வீதிகள் மறுசீரமைக் கப்படாமல் உள்ளன.

திருகோணமலை மாவட்டத்திலே காணப்படும் மாகாண மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் வரும் முதன்மையான வீதிகள் மற்றும் உள்ளக வீதிகள் மிகவும் மோசமான நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. எடுத்துக் காட்டாக வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் ஐந்து கிலோமீட்டர் நீளமான இலங்கைத்துறை முகத்துவாரம் வீதி, இரண்டு கிலோ மீற்றர் நீளமான பூநகர் – பூமரத்தடிச் சேனை டி 1 வாய்க்கால் வீதி, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் மூன்று கிலோ மீற்றர் நீளமான கிளிவெட்டி கிரான்குளம் – ஆதீயம்மன் கேணி வீதி, நான்கு கிலோ மீற்றர் நீளமான மல்லிகைத்தீவு – கங்குவேலி பிரதான வீதி, இரண்டு கிலோ மீற்றர் நீளமான மேன்கமம் – மல்லிகைத்தீவு வீதி பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் இருநூறு மீற்றர் நீளமான பொது மருத்துவ மனை வீதி மற்றும் இருநூறு மீற்றர் நீளமான ஈஸ்வரபுரம் உள்ளக வீதி, தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் ஒன்றரை கிலோ மீற்றர் நீளமான பாலம் போட்டாறு பாடசாலை வீதி, ஒன்றரை கிலோ மீற்றர் நீளமான சிப்பித்திடல் பிரதான வீதி, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அடங்கும் 48 கிலோ மீற்றர் நீளமான திருகோணமலை – புல்மோட்டை வீதி முதலியன மிகவும் மோசமான நிலையில் பயன்படுத்துவதற்கு முடியாது காணப்படுகின்றன. இதனை மறுசீரமைக்க ஆவன செய்ய வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் வீதிகள் மட்டுமன்றி பாலங்களும் பழுதடைந்துள்ளன. இவை நீண்ட காலத்துக்கு முன்னர் கட்டப்பட்டவையாகும். எடுத்துக்காட்டாக மூதூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ளடங்கும் கட்டைபறிச்சான் பாலம் மற்றும் இறால் பாலம் என்பன முழுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. இவற்றைச் சீரமைக்காவிட்டால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றைப் புதிதாக அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

அதேபோன்று வெருகல் பிரதேசத்தில், ஏரிக்கும் கடலுக்கும் இடையில் சுமார் 5000 மக்கள் வாழ்கின்றனர். பேரிடர் காலங்களில், மக்கள் இங்கிருந்து வெளியேற முடியாமல் சிக்கி மரணத்தை சந்திக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. இவ்வாறான விளைவுகளைத் தடுக்க ஏரியின் மீது பாலம் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் புன்னையடிப் பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூற்று ஆய்வுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் 2019 இல் செய்யப்பட்டு 464 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பிடப்பட்டது. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக இந்தச் செயற்றிட்டம் நடைபெறாது போயிற்று. எனவே இந்தப் பாலத்தைத் தாமதம் இன்றி அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடையில் கொக்கிளாய் ஏரி உள்ளது. இது ஒர் ஆழமற்ற ஏரியாகும். புல்மோட்டையில் வாழும் மக்கள் கொக்கிளாய் ஏரி வழியாக 32 கிலோ மீற்றர் பயணித்தால் முல்லைத்தீவைச் சென்றடையலாம். பாலம் இல்லாததால் மக்கள் வவுனியா வரை சுற்றிச் சென்று 75 கிலோ மீற்றர் அதிகமாக பயணித்து முல்லைத்தீவுக்கு செல்ல வேண்டியுள்ளது. இது பணச் செலவையும் நேரச் செலவையும் ஏற்படுத்துகிறது. கொக்கிளாய் எரியின் மீது பாலம் அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருகோணமலை மாவட்டத்தின் முதன்மையான வளமாக காணப்படுவது அதன் இயற்கை துறைமுகமாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டின் கடற்படை தளபதியாக பணிபுரிந்த வில்சன் என்பவர் இங்கிலாந்து அரசுக்கு எழுதிய கடிதத்தில் “ யார் திருகோணமலை துறைமுகத்தை வைத்திருக்கிறானோ அவனே இந்து மா கடலின் திறவு கோலை வைத்திருப்பவன் ஆவான்” என்று குறிப்பிடுவதில் இருந்து திருகோணமலை துறைமுகத்தின் முதன்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம். சுதந்திரத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த அரசுகள் இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் பெரிய அக்கறை காட்டவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

திருகோணமலை துறைமுகத்தின் உள்ளே 04 இறங்கு துறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று அஸ்ரப் இறங்கு துறை என்று அழைக்கப்படுகிறது. இது இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது. எஞ்சிய மூன்று இறங்கு துறைகளில் ஒன்றை பிறிமா மா ஆலையும் மற்றொன்றை டோக்கியோ சீமேந்து ஆலையும் பிறிதொன்றை இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனமும்

தொடர்ச்சி▼

# திருமலையில் துறைமுக அதிகார சபை கையகப்படுத்திய காணிகளை மக்களிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்!

**தொடர்ச்சி▲**

பயன்படுத்துகின்றன.

அஸ்ரப் இறங்கு துறையானது தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுடன் மாத்திரம் இன்று வரை ஆளணி பற்றாக்குறை , போதிய கப்பல் தரிப்பிட வசதியின்மை, போதிய சரக்கு களஞ்சிய வசதியின்மை, சரக்கு ஏற்றி இறக்கும் கனரக இயந் திரங்கள் இன்மை, முறையான வாகன ஓடுதளம் இன்மை முதலிய குறைபாடுகளோடு காணப்படுகின்றது.

இதன் காரணமாக இங்கு வரவேண் டிய கடற் கலங்களுக்கு சிறந்த சேவை கிடைப்பதில்லை. இதனால் அவை வேறு துறைமுகங்களை நாடிச் செல் கின்றன. இதன் விளைவாக நமக்கு பாரிய வருவாய் இழப்பு ஏற்படுகின்றது. துறைமுகத்தில் உள்ள குறைபாடுகளை சீர் செய்வதன் மூலம் கணிசமான அந்நிய நாணயமாற்று வருவாய் ஈட்ட முடியும். முற்கூறியவாறு மூன்று நிறுவனங்கள் பயன்படுத்தும் மூன்று இறங்கு துறைகளையும் இலங்கைத் துறைமுக அதிகார சபையே நிர்வகித் தால் கூடுதல் வருவாயை நாட்டுக்கு ஈட்ட முடியும் என்பதோடு வேலை வாய்ப்புகளையும் வழங்க முடியும்.

துறைமுகத்தை அண்டியுள்ள எண்ணெய்க் குதங்களில் பத்து வீதத் துக்கும் குறைவானவையே பயன்பாட்டில் உள்ளன. ஏனையவற்றையும் பயன் பாட்டுக்கு கொண்டு வந்தால், இந்துமா கடலில் பயணம் செய்யும் கடற் கலங் களுக்கு எரிபொருள் வழங்கி பெருமளவு அந்நிய நாணய மாற்றை ஈட்டுவதோடு வேலை வாய்ப்பையும் வழங்கலாம்.

இலங்கைத் துறைமுக அதிகார சபையானது பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம சேவையாளர் பிரிவில் அடங்கும் 5226 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்தி வைத்துள்ளது உள்ளது. இதில் 1882 ஏக்கரில் மக்கள் நீண்ட காலமாக வாழ்கின்றார்கள், எனவே துறைமுக அதிகார சபையிடம் இருந்து இதனை விடுவித்து அதில் வாழும் மக்களுக்கு வழங்க ஆவன செய்யுமாறு அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைப் போக்குவரத்து சபை யின் திருகோணமலை மாவட்ட அலு வலகத்துக்கு 37 பஸ்கள் தேவை. எனினும் 20 பஸ்கள் மட்டுமே அதனிடம் உள்ளன. இதனால் இலங் கைப் போக்குவரத்து சபையானது சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளது. எனவே பழுதடைந்துள்ள பஸ்களைத் திருத்த ஆவன செய்யுமாறும் , குறைந்தது பத்து புதிய பஸ்களை திருகோணமலை மாவட்டத்துக்கு வழங்குமாறும் அத்தோடு இலங் கைப் போக்குவரத்து சபையின் திரு கோணமலை மாவட்ட அலுவலகத்தில் காணப்படும் 50 வீதமான ஆளணி பற்றாக் குறையை நிரப்ப ஆவன செய்யுமாறும் வேண்டிக் கொள்கிறேன். இலங்கைப் போக்குவரத்து சபையின் திருகோணமலை மாவட்ட தரிப்பிட உள்ளக ஓடுதளம் மிக மோசமாக பழுதடைந்துள்ளது. இதனை மறுசீர மைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.– என்றார்.

# பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பது வாய்ப் பேச்சுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது!

## உதுமான்கண்டு நாபீர் தெரிவிப்பு

**(பாறுக் ஷிஹான்)**

பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பது வாய்ப் பேச்சுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது என்று சமூக செயற்பாட்டாளரும் பொறியி யலாளருமான உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு,

எமது நாட்டில் இதுவரையில் மகளிர் தினக் கொண்டாட்டங்கள் பெண்களின் உரிமைகள் பற்றி பேசுவதாக மாத்திரமே இருந்த போதிலும் பெண்களின் உரிமைகள் பேச்சளவில் மாத்திரம் இருக்கக் கூடாது . அதற்காக அரசு தற்போது தேவையான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாரம்பரிய வகிபாகங்களுக்கு அப் பாற்பட்ட அறிவு திறன் மற்றும் தொழில் தன்மையுடன் கூடிய இலங்கைப் பெண்கள் இன்று இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு தனித்துவமானப் பங்களிப்பை வழங்கி வருகின்றனர். உலகில் பெண்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஒரு நாளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் வருடத்தில் 365 நாள்களும் அவளுக்கு மரியாதையும் பலமும் கொடுக்கப்பட வேண்டும். பெண்கள் காலூன்றி நிற்கும் வகையில் பொருளாதாரம் வலுப்பெற வேண்டும்.

இத்தகைய பின்னணியில் குடும்பம்



மட்டுமின்றி சமூகத்திலும் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கும் பெண்கள் நாட்டின் அபிமானத்துக்கு உரியவர்கள். இன்று நாட்டின் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களில் பெண்களே பெரும்பான்மையாக உள்ளனர்.

ஆனால் பல்கலைக்கழகக் கல் வியை முடித்து திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்ற பிறகு அவர் களின் பயணம் நிறுத்தப்படுகிறது. குழந்தைகளைப் பெற்றெடுப்பதும் தாயாகுவதும் விலைமதிப்பற்றது. ஆனால் அவர்களின் பயணம் இதோடு நின்றுவிட வேண்டியதில்லை.

நம் நாட்டுக்கு அதிக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவது பெண் கள்தான் என்பதைப் பெருமையுடன் நினைவுகூர வேண்டும். மேலும் விவசாயத் தொழில்துறை ஆடைத் தொழிலில் பெண்களே அதிக பங்க ளிப்பு செய்கின்றனர். ஒரு நாட்டின் அரசியலையும் பொருளாதாரத்தையும் மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தை தீர்க்கும் திறன் பெண்களுக்கு உள்ளது.

மகளிர் தினத்தை ஒரு தினத்துக்கு மட்டுப்படுத்தாமல் புதிய சட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்கிப் பெண்களின் அபிமானம் மற்றும் பாதுகாப்புக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பெண்கள் மீதான பாகுபாட்டைத் தவிர்க்க முதல் முறையாக தேசிய ஆண், பெண் பாலினக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளமை சிறப்பம் சமாகும்.

அத்தோடு அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கத் தேவையான சட்ட திருத்தங்களையும் அரசு மேற்கொண்டு வருகிறது. இது தவிர அம்பாறை மாவட்டத்திலும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாடசாலை கல்வி மற்றும் உயர்கல்வியை இடை நடுவில் கைவிட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கான தொழிற்துறைகளை உருவாக்குவதும் இக்காலத்தின் தேவை யாகவுள்ளது.

திருமண வயதை எட்டியும் பொருளாதார சிக்கலால் அவற்றை நிறைவேற்ற சிரமங்களை எதிர்கொள் ளும் பெண்களை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வைக் காண முன்வர வேண்டும். எதிர்காலத்தில் சுமார் 5000 பெண்களுக்கு இதனடிப்படையில் பல்வேறு வசதி வாய்ப்புக்களை வழங்கவுள்ளேன்.

எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் பாதுகாப்பான மற்றும் வளமிக்க நாட் டைக்கட்டியெழுப்புவதற்கான எதிர்பார்ப்ப தோடு சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்க ளைத் தெரிவிக்கிறேன்.– என்றுள்ளது.

# வடக்கு - கிழக்கில் சிதைவடைந்துள்ள பாதைகள், பாலங்களை புனரமைக்குக!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அரசிடம் கோரிக்கை

வடக்கு – கிழக்கில் மாகாணங்களில் சிதைவடைந்துள்ள பாதைகள், பாலங்களைப் புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கிட்டங்கி பாலம், மாவடிப்பள்ளி பாலம் ஆகியன மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளன. இந்த இரண்டு பாலங்களும் மிகவும் முக்கியமானவை. இதனை அடுத்த வரவுசெலவுத் திட்டத்திலாவது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மாவடிப்பள்ளி – கல்முனை பாதைக்கான மாற்றுப்பாதை போடப்பட்டு, ஏதோ சதி காரணமாக இடையில் நிறுத்தப்பட்டது. அந்தப் பாதை உயர்த்தி போடப்படாமையினால், பொலிவேரியன் கிராமம் உள்ளிட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மிகவும் பாதிக்கப்பட்டதுடன், அப்பகுதி மக்களும் பாரிய அவலங்களுக்குள்ளாகினர். எனவே, இது தொடர்பிலும் கவனம் செலுத்துங்கள்.

அதேபோன்று, ஒலுவில், அஷ்ரப் நகரை ஊடறுத்துச் செல்லும் தீகவாபி பாதையையும் கொங்கிரீட் அல்லது காபெட் வீதியாகப் பூரணப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. மன்னார் நகரில் இருந்து ரயில் நிலையத்துக்குச் செல்கின்ற, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் உள்ள முக்கியமான பாதை இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றது. அதேபோன்று, முருங்கன் – சிலாவத்துறை வீதி ஆகியவற்றையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனத்தில் கொள்ளுங்கள்.

வட்டுவாகள் பாலத்துக்கு ஆயிரம் மில்லியன் ரூபா நீங்கள் ஒதுக்கியிருக்கின்றீர்கள். அதற்கு வன்னி மாவட்ட மக்கள் சார்பாக நன்றி கூறுகின்றோம். ஆனால், அதன் மதிப்பீடு



2750 மில்லியன் ரூபாவாகும். எனவே, இது தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோன்று, வவுனியா, பரயனாளங்குளம் பாதை, வெளிக்குளம், மாமடுவ பாதையும் இன்னும் புனரமைக்கப்படாமல் இருக்கின்றன. நேரியகுளத்திலிருந்து நெளுக்குளம் செல்கின்ற பாதையில் 12 கிலோ மீற்றரில் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. மழை காலங்களில் வெள்ளத்தால் அப்பகுதி பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

புத்தளம் நகரத்தில் உள்ள பாதைகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல், சாதாரண ஓட்டோ ஒன்றுகூடச் செல்ல முடியாத துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. நான் கடந்த அரசுடன் பேசி, 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. புதிய அரசு வந்ததும் அந்த நிதி சுற்றறிக்கை மூலம் மீளப் பெறப்பட்டுள்ளது.

அத்துடன், இராமேஸ்வரத்துக்கும் மன்னாருக்குமான கப்பல் சேவை இருந்த காலத்தில், மன்னார் ஒரு பொருளாதார கேந்திர தளமாக விளங்கியது. அன்றைய காலகட்டத்தில், அந்த மக்கள் பொருளாதாரத்தில் மேம்பட்டிருந்தார்கள். எனவே, இராமேஸ்வரம் – தலைமன்னார் கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, மன்னார் – புத்தளம் பாதை, மன்னாரில் இருந்து மறிச்சுக்கட்டி வரை, புத்தளம் முதல் எலுவன்குளம் வரையிலும் காப்பெட் பாதையாக போடப்பட்டுள்ளது. சிறிய பகுதியே புனரமைப்பு செய்யப்படாமல் காணப்படுகின்றது. சில அரசு சார்பற்ற நிறுவனங்கள், அவர்களின் சொந்த தேவைகளுக்காக, அந்தப் பாதையை மூடுமாறும் புனரமைக்க வேண்டாம் எனவும் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார்கள். ஆனால், நீதிமன்றம் இந்தப் பாதையை மூடுமாறு எவ்வித உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. எனவே, அமைச்சர் பிமல் ரத்நாயக இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, சட்டமா அதிபருடன் பேசி, சுற்றாடல் அமைச்சினது அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, இந்தப் பாதையை மக்கள் பாவனைக்குப் புனரமைத்துக் கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். நூறு வருடங்களுக்கும் மேலாகப் பழமை வாய்ந்த அந்தப் பாதையைப் பயன்படுத்துகின்றபோது 100 கிலோ மீற்றர் மிச்சப்படுத்தப்படும்.

அதேபோன்று, குருநாகல் – கண்டி அதிவேகப் பாதையினை வடக்கு, கிழக்குடன் இணைப்பதன் மூலம், அந்தப் பிரதேசங்களில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த முடியும்.

சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது, வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் பூரணப்படுத்தப்படாமல் அப்படியே இருக்கின்றன. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களின் போது, அந்த வீட்டுத் திட்டங்களில் வசிக்கும் மக்கள் எம்மிடம் வந்து அழுது புலம்புகின்றனர். ஆட்சி மாறியதன் பின்னர் கோட்டா அரசு அந்த வீட்டுத் திட்டப் பணிகளைப் பூர்த்தி செய்யவில்லை. கோட்டாவின் அவ்வாறான இனவாத செயற்பாடுகளால்தான் அவர் விரட்டியடிக்கப்பட்டார். எனவே, அவ்வாறான செயல்களை நீங்களும் செய்யாதீர்கள். சஜித் பிரேமதாஸவால் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அது மக்களுக்கான வீட்டுத்திட்டம். எனவே, அந்த வீடுகளை கட்டி முடிக்க உதவி செய்யுங்கள்.

அத்துடன், சிலாவத்துறையில் ஒரு கலாச்சார மண்டபத்தை கட்டினோம். 20 சதவீத வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில், அப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளன. கடந்த அரசு நான்கு வருட காலமாக எஞ்சிய பணிகளை பூர்த்தி செய்யாமல் இழுத்தடித்தது. இந்தக் கட்டடத்தின் பணிகளை நிறைவு செய்து தாருங்கள். அரசிடம் பணம் இல்லை எனில் வெளிநாடுகளின் உதவியைப் பெற்றாவது இந்தக் கட்டடத்தின் பணிகளை நிறைவு செய்ய முன்வாருங்கள். இது தொடர்பில் சில நாடுகளுடன் நான் பேசியுள்ளேன். வெளிநாடுகள் உதவி செய்யத் தயாராக உள்ளன.– என்று கூறினார்.

இவற்றுக்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக, "சுற்றாடல் பிரதி அமைச்சர் வடக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். நீங்கள் குறிப்பிட்ட இடங்களையும் அவர் பார்வையிடுவார். அதன் பிற்பாடு தங்களுடன் கலந்துரையாடுகின்றேன்" என்று கூறினார்.






# பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்புடன் மாத்தறை மாவட்ட பட்டதாரிகள் கலந்துரையாடல்

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

மாத்தறை மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறப்பான பெறுபேறுகளை பெற்று, ஆசிரியர் உதவியாளர் நியமனத்துக்கு விண்ணப்பித்தும், இதுவரை நியமனம் பெறாதவர்கள் மற்றும் மாத்தறை மாவட்டத்தில் உள்ள பட்டதாரிகள் ஆகியோருக்கும் பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று தெனியாயில் உள்ள சில்ட் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

பெருந்தோட்டத் துறை மக்கள் குரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்டனி ஜேசுதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் திட்டப் பணிப்பாளர் லவீனா ஹசந்தி, தேசிய திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரான்சிஸ் ராஜன், கள முகாமையாளர் என்டன் வனத்தையா மற்றும் தொண்டர் ஆசிரியர் துசித ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்வியாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து ஆழமாக கலந்துரையாடப்பட்டது. உயர்தரத்தில் சித்தியடைந்த தென் மாகாண, மலையக மாணவர்களை ஆசிரியர் உதவியாளர்கள் நியமனத்துக்குச் சேர்த்துக்கொள்வதற்கான செயற்றிட்டங்கள் கடந்த அரசால் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், இடையில் அது கைவிடப்பட்டதன் காரணமாக இவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர் என்பது பற்றியும் பேசப்பட்டது.

தென் மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக, உயர்தர மாணவர்கள் தங்கள் பாடவிதானங்களைத் தெரிவு செய்வதில் பல சிக்கல்களை சந்திக்கின்றனர் என்றும் உயர்தரத்தில் சிறப்பான பெறுபேறுகளை பெற்றவர்கள் தற்போது கடைகளிலும், தோட்டங்களிலும் வேலை செய்கின்றனர் என்றும் தெரிவித்தனர்.

இந்த கலந்துரையாடலின் இறுதியில், கல்வி அமைச்சருக்கு வழங்குவதற்கான மகஜரொன்று தயார் செய்யப்பட்டது.

# பெண் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் கற்பிட்டியில்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெண்களால் முன்னெடுக்கப்படும் உற்பத்தி பொருள்ட்கள் மற்றும் விற்பனைகளை மேம்படுத்தும் நோக்கோடு கற்பிட்டியில் பெண் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் சாந்திலதா தலைமையில் மகளிர் தினத்தை முன்னிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.



கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் சமூக வலுவூட்டல் அமைச்சின் புத்தளம் மாவட்ட உளவளதுனை இணைப்பாளர் எச்.எம். நிப்ராஸ், கற்பிட்டி பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை பொறுப்பதிகாரி ஏ.ஆர். முனாஸ், கலாச்சார உத்தியோகத்தர் எஸ் ஏ.எஸ். சமரசிங்க, மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் பாசில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் சபீர், அனார்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். சிபாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெண் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் ஊடாக பெண்களைப் பொருளாதார ரீதியில் வலுப்படுத்துவதற்கும் அவர்களின் உற்பத்திப் பொருள்களை தரம் மிக்கதாக வும் அவர்களுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத் துவதற்கும்முயற்சிகள் மேற்க்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.



# இராணுவத்தின் 542 ஆவது காலாட்படை ஏற்பாட்டில் மன்னாரில் கலாசார போட்டிகள்





(மன்னார் நிருபர்)

இராணுவத்தின் 542 ஆவது காலாட்படை பிரிவினரின் ஏற்பாட்டில் மன்னார் மற்றும் மடு வலய பாடசாலை மாணவிகள் பங்கேற்ற கலாச்சார நடன நிகழ்வு நேற்று சனிக்கிழமை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் 542 காலாட்படை பிரிவினரின் ஏற்பாட்டில் மன்னார் மற்றும் மடு வலய பாடசாலை மாணவிகள் பங்கேற்ற கலாச்சார நடன நிகழ்வு போட்டியாக இது இடம்பெற்றது.

இராணுவத்தின் 542ஆவது பிரிவு அதிகாரி மேஜர் விக்டர் பெர்னாண்டோ மற்றும் பிரிகேடியர் சந்திக்க அசுருசிங்க ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலாச்சார நடனப் போட்டியில் 12 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

நிகழ்வில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தையும், மன் டிலாசால் கல்லூரி நானாட்டான் மாணவிகள் இரண்டாம் இடத்தையும் திருக்கேதீஸ்வரம் கௌரியம்பாள் தமிழ் மகா வித்தியாலய மாணவிகள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட மாணவிகள் விருந்தினர்களால் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டத்தில் இரண்டு சிங்கள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவிகளும் பங்கேற்று கலாச்சார நடனத்தை வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரிகேடியர் ஐ. பி ஜயசிங்க, நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி சிவசம்பு, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வை.சந்திரபால, மேஜர் ஸ்ரீநாத் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பில் இரத்ததான முகாம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மறைமாவட்டத் தவக்கால முயற்சி இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலயக் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்ததிர் நடத்திய இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை (09 திருஇருதய நாதர் ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது.

இருதயபுரம் திருஇருதயநாதர் ஆலயப் பங்குத் தந்தையுமான அருட்பணி சி.வி.அன்னதாஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்த இரத்ததான முகாமில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் வைத்தியர் க. விவேகானந்தநாதன், இரத்தவங்கி ஊழியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது இருதயபுரம் கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் இருதயபுரம் பங்குமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கியிருந்தனர். இந்த இரத்ததான முகாம் கடந்த 16 வருட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# நோன்பு காலத்தில் திருட்டுகள் அதிகரிப்பு அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து!

( வி.ரி.சகாதேவராஜா)

புனித ரமழான் நோன்பு காலத்தில் திருட்டுகள் அதிகமாகலாம். எனவே நள்ளிரவு நடமாட்டத்தை பொது மக்கள் முடிந்தளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று காரைதீவு பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

காரைதீவு மாவடிப்படியில் அண்மையில் எந்தவித அடையாளமும் இன்றி சூட்சுமமான முறையில் ஜன்னல் கழட்டப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளது.

காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் நகை, பணம் காணாமல் போயுள்ளது.

அதேவேளை ஒரே இரவில் இரு வீடுகளில் திருட்டுகள் இடம்பெற்றுள் சம்பவமும் பதிவாகியுள்ளது.

இந்த நிலையில் இரவு 11 மணிக்கு மேல் நடமாடும் நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் பொலிஸ் தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டு நடமாடும் விழிப்புக்குழு செயற்படுவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் இரவு 11 மணிக்குப் பின்னர் தேவையற்ற நடமாட்டங்களைக் குறைக்குமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சாய்ந்தமருது சுகாதார அலுவலகத்தில் தென்னை மரக் கன்றுகள் நடும் திட்டம்!

(நூருல் ஹுதா உமர்)

‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் சுற்றுச் சூழலை அழகுபடுத்தும் செயற்பாடு இடம்பெற்றுள்ளது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அலுவலக வளாகத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை நிலையை மேம்படுத்தலுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பயன் தரும் தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டன. பசுமை நிறைந்த சுற்றுச் சூழலை உருவாக்கும் நோக்குடன் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் இந்த திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற தொடர் பராமரிப்பு முறைகள் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இந்தத் திட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் புதிய ஓர் ஆரம்பம் என்றும் இது சுற்றுச்சூழலை பாதுகாக்க உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சாம்பல்தீவு திருச்சிலுவை மலை கத்தோலிக்க புதிய ஆலயம் திறப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, சாம்பல்தீவு திருச்சிலுவை மலை கத்தோலிக்க புதிய ஆலயம் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிவண கலாநிதி நோயல் கிறிஸ்டியன் இம்மானுவேல் ஆண்டகையால் நேற்று (8) அபிசேகம் செய்து வழிபாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்டத்தின் சாம்பல்தீவு பங்குக்கு உட்பட்ட இந்த ஆலயம் அப்போதைய ஆயர், காலஞ்சென்ற அதிவண இக்னேசியஸ் கிளனி ஆண்டகையின் காலத்தில் இந்த மலைப் பகுதியில் இற்றைக்கு 60 ஆண்டுகளுக்கு முன்னர் சிற்றாலயமாக முதன் முறையாக கட்டப்பட்டது. அதனை அடுத்து இந்த மலை சிலுவை மலை என அழைக்கப்பட்டது. தற்போது இந்தப் பிரதேச கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு ஏற்ப முன்னர் அமைக்கப்பட்டிருந்த ஆலயம் போதுமானதாக இல்லாத நிலையை அடுத்து இந்த ஆலயம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்று சாம்பல் தீவு பங்கு குருவானவர் அருட்பணி றொகான் அடிகளார் கூறினார்.








# கிழக்கு ஆளுநருடன் பேசினர் மருத்துவ சங்கப் பிரதிநிதிகள்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவுக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கும் இடையிலான கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி. ஏ. சி. என். தலங்கம, ஆளுநர் செயலக செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டி.ஜி.எம். கொஸ்டா மற்றும் பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

அதன்படி, வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் இதன்போது கூறினார்.




# கல்லோயாசிறு போகத்துக்கான ஆரம்பக் கூட்டம்

(வி.ரி. சகாதேவராஜா)

கல்லோயா வலது கரை, தமண பிரிவின் 2025 சிறு போகத்துக்கான ஆரம்பக் கூட்டம் தமண பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்கிரம தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், விவசாய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர்கள், தமண பிரதேச செயலாளர், திணைக்களத் தலைவர்கள், உயர் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயக் குழுக்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# பனைசார் தொழிலாளர் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## பேராசிரியர் க.பகீரதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

பனைசார் தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க பனை அபிவிருத்திச் சபையினுடைய புதிய பணிப்பாளர்சபை என்றும் அயராது உழைக்கும் என்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் விவசாய பீடாதிபதியும் வியாபார இணைப்பு அலகின் பணிப்பாளருமான பேராசிரியர் கந்தையா பகீரதன் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் ஆறு பேர் அடங்கிய புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவராக பேராசிரியர் பகீரதன் நியமிக்கப்பட்ட நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பனை அபிவிருத்திச் சபையை அரசுக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் நிறுவனமாக மாற்றவும் சபைக்கு கீழே இயங்கும் இரத நிறுவனங்களின் வியாபாரத்தை அதிகரிக்கவும் பனை அபிவிருத்திச் சபையை மேலும் ஒருபடி மேலே கொண்டு செல்லவும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவர் என்ற வகையில் எனது ஒத்துழைப்பை வழங்குவேன்.

பனைசார் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

புதிய பணிப்பாளர்சபை பனைசார் தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் வழிகாட்டுதல்களை வழங்கி அவர்களை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்லும்.

பனை அபிவிருத்திச் சபையின் கீழ் உள்ள வடிசாலைகளை மீள இயங்கித் தொழிலாளர்களுடைய தொழிலைப் பாதுகாப்போம்.

பனை அபிவிருத்திச் சபையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க அதன் தலைவருக்கு உறுதுணையாக இருந்து சபையின் கீழ் பணிபுரியும் ஊழியர்களை வினைத்திறனான பணியாளர்களாக மாற்றுவதற்கும் என்னால் முடிந்தவரையான ஆலோசனைகளை வழங்குவேன்.

அத்துடன் துறைசார் நிபுணர் என்ற



வகையில் பனை அபிவிருத்திச் சபைக்கு வெளிநாட்டு மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து பனைசார் பொருளாதாரத்தை பாதுகாப்பதில் எனது பங்களிப்பு காணப்படும்.

துறைசார் நிபுணராக என்னை அடையாளம் கண்டு பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைக்கு நியமித்த பெருந்தோட்ட அமைச்சருக்கு நன்றிகள். அமைச்சரவை அமைச்சர் சந்திரசேகர், தொழிலாளர்களுடைய நலன் சார்ந்து எடுக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களிலும் எனது பங்களிப்பு இருக்கும்.– என்றார்.

# தமிழக - கர்நாடக எல்லையில் வீதி மறியல்; வாட்டாள் நாகராஜ் உட்பட 100 பேர் கைது

காவிரி ஆற்றின் குறுக்கே மேகே தாட்டுவில் கர்நாடக அரசு அணை கட்ட ஆட்சேபனை தெரிவிக்கும் தமிழக அரசைக் கண்டித்து, கர்நாடக மாநில எல்லையான அத்திப்பள்ளியில் நேற்று வீதி மறியலில் ஈடுபட்ட வாட்டாள் நாகராஜ் உள்ளிட்ட கன்னட அமைப்பினர் 100 இற்கும் மேற்பட்டோரை அம்மாநில பொலிஸார் கைது செய்தனர்.

கன்னட சலுவாலி வட்டாள் பக்ஷா அமைப்பின் தலைவர் வாட்டாள் நாகராஜ் தலைமையில் கன்னட அமைப்புகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்டோர் நேற்று கர்நாடக மாநில எல்லையான அத்திப்பள்ளியில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

மேலும், தமிழக எல்லையான



ஓசூர் ஜுஜுவாடி பகுதிக்குள் அவர்கள் நுழைய முயன்றனர். அப்போது, அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த கர்நாடக மாநிலம் ஆனேக்கல் பொலிஸார் வாட்டாள் நாகராஜ் உள்ளிட்ட 100 இற்கும் மேற்பட்டோரைக் கைது செய்து, அழைத்துச் சென்றனர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் வாட்டாள் நாகராஜ் கருத்து தெரிவிக்கையில்,

“மேகேதாட்டு அணை விவகாரத்தில் தமிழக அரசைக் கண்டித்து பந்தில் ஈடுபட உள்ளோம். தமிழக அரசு மேகேதாட்டு அணை கட்ட ஆட்சேபனை இல்லை என ஒரு மாதத்துக்குள் தெரிவிக்க வேண்டும். இல்லை என்றால் முதல்கட்ட போராட்டமாகக் கர்நாடக மாநிலத்தில் உள்ள திரையரங்குகளில் தமிழ்த் திரைப்படங்களை ஓட விட மாட்டோம்.

மும்மொழி கொள்கைக்கு எதிராகத் தென்னிந்திய மாநில பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழு என்பதை நாங்கள் கண்டிக்கிறோம். தமிழகத்தில் நடக்கும் இந்தி போராட்டத்தை விட, கர்நாடக மாநிலத்தில் இந்தி மொழிக்கு எதிராக மிகப்பெரிய போராட்டங்களை நடத்தி வருகிறோம்.” - என்றார்.

# தமிழகத்தில் தி.மு.கதான் இந்தியை திணிக்கிறது

## தமிழிசை விமர்சனம்



இந்தியை தி.மு.கதான் திணிக்கிறது என தமிழிசை சவுந்தர ராஜன் விமர்சித்துள்ளார்.

தமிழக பாஜக தென்சென்னை மாவட்டம் சார்பில் மகளிர் தின விழா தி.நகரில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், மாநிலச் செயலாளர்கள் கராத்தே தியாகராஜன், பிரமிளா சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழிசை சவுந்தரராஜன் உரையாற்றுகையில்,

“அடுத்த ஆண்டு மகளிர் தின விழாவை, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில், பா.ஜ.க. பெண் அமைச்சர்கள் தலைமையில் கொண்டாடுவோம். தமிழகத்தில் பெண்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், பா.ஜ.க. கூட்டணி ஆட்சி வர வேண்டும். தி.மு.கவின் குற்றங்கள் எல்லாம் மறைக்கப்பட்டு, மொழிப்போர் என்றும், இல்லாத மறுசீரமைப்பையும் எடுத்துக்கொண்டு, மொட்டை வாளுடன், போருக்கு தயார் என தி.மு.க. சொல்லிக் கொண்டிருக்கிறது.

பா.ஜ.கவின் கையெழுத்து இயக்கத்தில் பொதுமக்கள் தாமாக முன்வந்து கையெழுத்து போடுகிறார்கள். கே.கே. நகரில் கையெழுத்து இயக்கத்தை பொலிஸார் தடுத்தபோது, மூன்று மணி நேரம் வெயிலில் நின்றேன். அதன்பிறகு பொலிஸ் அனுமதி கொடுத்தது. இதன்மூலம், சுட்டெரிக்கும் சூரியன் எங்களை ஒன்றும் செய்யாது என்பதை நாங்கள் செயலில் காட்டியிருக்கிறோம்.

நமக்கு மூன்றாவது ஒரு மொழி தேவை. ஏனென்றால், அது வாய்ப்புகளை விரிவடைய செய்யும். புதிய கல்விக் கொள்கை என்றாலே, இந்தி இந்தி என்று சொல்வதை நான் மறுக்கிறேன். திணிக்காத இந்தியை நீங்கள் திணித்து கொண்டிருக் கிறீர்கள். இதை வன்மையாக கண் டிக்கிறேன். பா.ஜ.கவுக்கு தமிழ் உயிர் போன்றது. தமிழுக்கு ஒரு பங்கம் என்றால் முதலில் உயிர் கொடுப்பது பா.ஜ.க. தொண்டராகத்தான் இருப்பார்.

தி.மு.கவினர் கோயிலுக்குச் செல்ல மாட்டோம் என்பார்கள். ஆனால், ஒளிந்து கொண்டு கோயிலுக்கு செல்வார்கள். அதேபோல், அவர்கள் இந்தியையும் ஒளிந்து கொண்டு தான் படிக்கிறார்கள். தி.மு.கவில் வெளியே சொல்வது ஒன்று. உள்ளே நடப்பது ஒன்று. ஆனால், எங்கள் நடவடிக்கை வெளிப்படையாகத்தான் இருக்கும்.” - என்றார்.

# தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்: பிரேமலதா

தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க. சார்பில் உலக மகளிர் தினவிழா சென்னை கோயம்பேட்டில் உள்ள அந்த கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. இதற்கு கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமை தாங்கினார். இதனைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“உலக மகளிர் தினம் கொண்டாடும் சூழலில், தமிழகம் முழுவதும் பாலியல் வன்கொடுமைகள், பெண்களுக்கு



பாதுகாப்பு இல்லாத சூழல், சட்டம் ஒழுங்கு பிரச்சினை நிலவுகிறது. முதல்வர் ஸ்டாலின் தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தில் தமிழ் மொழியை கட்டாய பாடமாக வழங்க வேண்டுமென தேமுதிக சார்பில் வலியுறுத்துகிறோம்.

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக மத்திய அரசு இதுவரை எவ்வித அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியிடவில்லை. அதனால் அதுபற்றி நாம் அதிகம் பேச தேவையில்லை. அதே நேரம் மத்திய அரசு தமிழகத்தில் நாடாளுமன்ற தொகுதிகளை குறைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் தேமுதிக அதை கடுமையாக எதிர்க்கும். இந்த விவகாரத்தில் தமிழக அரசுடன் இணைந்து தமிழக மக்களை காப்போம்.” - என்றார்.

இதன்போது பிரேமலதாவிடம், மாநிலங்களவை உறுப்பினர் இடம் தொடர்பாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியின் கருத்து குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பிரேமலதா பதிலளிக்க மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் பாதுகாப்பு படையினர் ஆசாத் ஆதரவாளர்களுடன் மோதல்

## 300 இற்கு மேற்பட்டோர் பலி



சிரியாவில் பாதுகாப்புப் படையினர், முன்னாள் ஜனாதிபதி ஆசாத் ஆதரவாளர்கள் இடையிலான மோதலில் பொதுமக்கள் உட்பட சுமார் 300 இற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பரில் துருக்கி ஆதரவு பெற்ற ஹயாத் தஹ்ரிர் அல் ஷாம் (எச்.டி.எஸ்) கிளர்ச்சி படை சிரியாவை கைப்பற்றியது. அதையடுத்து அப்போது ஜனாதிபதியாக இருந்த ஆசாத் வெளிநாட்டுக்கு தப்பினார். இந்நிலையில், அந்த நாட்டின் வடமேற்கில் உள்ள கடலோர நகர பகுதிகளில் சிரியா பாதுகாப்பு படை மற்றும் ஆசாத் ஆதரவாளர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அங்கு தங்கள் படை பலத்தை அதிகரிக்கும் வகையில் கூடுதல் படையினரை இடைக்கால அரசு அனுப்பியது.

இரு தரப்புக்கும் இடையிலான மோதலில் பொதுமக்கள் உட்பட 300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். கடந்த வியாழக்கிழமை அந்த நாட்டில் உள்ள டார்டஸ் மற்றும் லடாகியா மாகாணங்களில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகள், பாதுகாப்புப் படைகள் மற்றும் இராணுவ நிலைகள் மீது ஆசாத் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில், மீண்டும் அந்த பகுதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக சனிக்கிழமை அன்று சிரியா பாதுகாப்பு படை தகவல் அளித்துள்ளது. இதை அந்த நாட்டின் அரசு தரப்பு செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது. பாதுகாப்பு படையினர் மீது தனிப்பட்ட நபர்கள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி தரும் வகையில் அங்கு கூடுதலாக பாதுகாப்பு படையினர் பணி அமர்த்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சிரியாவின் வடமேற்கு பகுதியில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த பகுதி ஆசாத் ஆதரவாளர்கள் அதிகம் இருக்கும் பகுதியாக அறியப்படுகிறது. மோதலை அடுத்து அந்தப் பகுதியில் வசித்து வந்த மக்கள் வெளிநாட்டு நிர்வகித்து வரும் முகாமில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த மோதலை அடுத்து சிரியாவின் இடைக்கால ஜனாதிபதி அகமது அல்-ஷரா வெள்ளிக்கிழமை அன்று வன்முறையில் ஈடுபடுபவர்கள் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், மக்களை சிறைப்படுத்த வேண்டாம் என்றும் கூறியிருந்தார். இந்த மோதலில் பாதுகாப்பு படையினரும் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவில் ஷியா பிரிவை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி ஆசாத்துக்கும் சன்னி பிரிவை சேர்ந்த கிளர்ச்சிக் குழுக்களுக்கும் இடையே சுமார் 14 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்தது.

துருக்கி ஆதரவு பெற்ற ஹயாத் தஹ்ரிர் அல் ஷாம் (எச்.டி.எஸ்), சிரியா தேசிய படை, அமெரிக்க இராணுவத்தின் ஆதரவு பெற்ற பிரீ சிரியா படை உள்ளிட்ட பல்வேறு கிளர்ச்சிக் குழுக்கள் சிரியா அரசுக்கு எதிராக போரிட்டு வந்தன. ஆசாத்துக்கு ரஷ்யாவும் ஈரானும் ஆதரவு அளித்து வந்தன. இந்த சூழலில் துருக்கி ஆதரவு கிளர்ச்சி குழுக்கள் கடந்த ஆண்டு டிசம்பரில் சிரியா தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றியது. அதையடுத்து ஆசாத் வெளிநாட்டுக்கு தப்பினார்.





# காஸாவின் மறுகட்டமைப்புக்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவு

காஸா போர் நிறுத்தத்தின் இரண்டாம் கட்டம் குறித்து நிச்சயமற்ற தன்மை நீடிப்பதால், பேச்சுவார்த்தை குழு ஒன்றை டோஹாவிற்கு அனுப்பவுள்ளதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் திட்டத்தை எதிர்க்கும் நான்கு ஐரோப்பிய நாடுகளும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பும் எகிப்து தலைமையிலான காஸாவின் மறுகட்டமைப்புக்கான திட்டத்தை ஆதரிப்பதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனிடையே காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் இதுவரையில் 48,553 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1,11,860 பேர் காயமடைந்துள்ளனர் என காஸா சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் ரஷ்யாவின் ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களால் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 37 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 5 சிறுவர்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலினால் பல கட்டடங்கள் மற்றும் சுமார் 30 வாகனங்கள் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 09/03/2025

## கனடாவில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் பலி

மொன்றியாலுக்கு அருகே சாடோகே வேலியில் (Châteauguay Valley) அமைந்துள்ள செயிண்ட்-கிரிஸ்டோஸ்டோம் (Saint-Chrysostome) பகுதியில் நடந்த மோதலில் 30 வயது 02▶




# கனடாவில் இன்று பிரதமர் தேர்வு

ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக உள்ளதால் கனடாவின் புதிய பிரதமர் இன்று தேர்வு செய்யப்பட உள்ளார்.

கனடா பிரதமராக இருக்கும் ஆளும் லிபரல் கட்சியை சேர்ந்த ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகி விட்டார். இதற்கான அறிவிப்பை கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டார்.

இதையடுத்து கனடாவின் புதிய பிரதமர் இன்று தேர்வு செய்யப்பட உள்ளார். 59 வயதான மார்க் கார்னி அடுத்த பிரதமராகலாம் என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன.

கனடாவுக்கு எதிராக ட்ரம்ப் வர்த்தக போரை ஆரம்பித்துள்ளார். இந்த நிலையில், அதை சமாளிக்கும் வகையில் மார்க் கார்னி செயல்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹாமில்டன் பல் மருத்துவமனையில் நோய்த்தொற்று அபாய எச்சரிக்கை

கனடாவில் ஹாமில்டன் நகரில் உள்ள ஒரு பல் மருத்துவமனையில் முறையாக தொற்று நீக்கப்படாத சாதனங்கள் பயன்படுத்தப்பட்டதால், நோயாளிகள் ஹெபடைட்டிஸ் மற்றும் பிற தொற்றுநோய்களுக்கு ஆளாகியிருக்கக்கூடும் எனப் பொதுச் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

Fennell & Ottawa பல் மருத்துவமனை (1134 Fennell Avenue East, Upper Ottawa Street அருகில்) இல் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு குறித்த கோளாறுகள் கண்டறியப்பட்டுள்ளதாக ஹாமில்டன் பொதுச் சுகாதார 03▶









# கனடா மீது கடுமையான வரிகளை விதிக்கும் சீனா

## மேலும் தீவிரமடையும் வர்த்தக மோதல்

ட்ரம்புக்கு மறைமுக பதிலடியாக கனடா மீது சீனா கடுமையான வரிகளை விதித்துள்ளது. இதனால், கனடா - சீனா வர்த்தக மோதல் மேலும் தீவிரமாகியுள்ளது.

சீனா, கனடாவின் கேனோலா எண்ணெய், இறைச்சி மற்றும் கடலுணவுகள் உள்ளிட்ட பொருள்களுக்கு 100 சதவீத வரி விதிப்பதாக அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம், சீனாவின் மின்சார வாகனங்கள், எஃகு மற்றும் அலுமினியத்திற்கு கனடா அதிக வரி விதித்தது. இதற்கு பதிலடி கொடுக்க சீனா இந்த புதிய வரிகளை அறிவித்துள்ளது.

இந்த புதிய வரிகள் மார்ச் 20 முதல் அமுலுக்கு வரும் என்றும், இது கனடாவும் மெக்சிகோவும் அமெரிக்காவின் வர்த்தக அழுத்தங்களுக்கு ஒத்துழைக்கக்கூடாது என்பதற்கான ஒரு எச்சரிக்கை என்றும் சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பைடன் நிர்வாகங்கள் தொடர்ந்து கனடாவும் மெக்சிகோவும் சீனாவின் மலிவான பொருள்களை வட அமெரிக்க சந்தையில் அனுமதிக்கக்கூடாது என்று அழுத்தம் கொடுத்து வருகின்றன.

கனடாவின் மிகப்பாரிய ஏற்றுமதி பொருளான canola எண்ணெய் இப்போது சீனாவில் 100 வீத வரிக்கு உட்படும்.

கனடா கடந்த ஆண்டு 3.29 பில்லியன் டொலர் மதிப்புள்ள கனோலா எண்ணெய்யை சீனாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது சீனாவிற்கான கனடாவின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் 13.4 வீதம் ஆகும்.

இதையடுத்து, கனேடிய பன்றி இறைச்சி மற்றும் கடலுணவுகளுக்கு சீனா 25 சதவீதம் வரி விதித்துள்ளது.

மொத்தத்தில், சீனா கனடாவுக்கு ஒரு பாரிய சந்தையாக இருப்பதால், இந்த நடவடிக்கை கனடாவின் பொருளாதாரத்துக்கு கடுமையான தாக்கம் ஏற்படுத்தலாம்.

2019 இல் மென்க் வான்சூ விவகாரத்தின் போது, சீனா கனடாவின் கேனோலாவுக்கு வரி விதித்ததை நினைவு படுத்தும் ஒரு நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா, கனடா, மெக்சிகோ வியாபார ஒப்பந்தங்களில் சீனாவை ஒதுக்க முயல்வதால், வர்த்தக மோதல் மேலும் தீவிரமடைய வாய்ப்பு உள்ளது.

கனடா இதுவரை எந்த அதிகாரப்பூர்வ மறுமொழியும் வழங்கவில்லை. இந்த வரிகள், இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தக உறவுகளை மேலும் கடுமையாக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.



## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் மற்றொரு நபர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கியூபெக் மாகாண பொலிஸாருக்கு இந்த சம்பவம் குறித்து தகவல் கிடைக்கப் பெற்றதாக தெரிவித்துள்ளனர்.

"இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ஒருவர் கடுமையாக காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் ஆனால் அங்கு அவர் உயிரிழந்துவிட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

30 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்று, அருகிலுள்ள ஒர்ம்ஸ்டவுன் (Ormstown) பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்குள் பதுங்கியிருந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரை கைது செய்ய பொலிஸார் இதற்காக பல குழுக்களை ஈடுபடுத்தியுள்ளனர். கைதான நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் குணமடைந்ததும் அவரிடம் விசாரணை நடத்தப்படும் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த நபர் மற்றும் சந்தேக நபருக்கு எந்த வகையான தொடர்பு இருந்தது என்பது குறித்த தகவலை பொலிஸார் வெளியிடவில்லை.




# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 16 வயது சிறுவன் உயிரிழப்பு

கனடாவின் ஹமில்டன் ஸ்டோனி க்ரீக்கில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 16 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

ஹாமில்டன் பொலிஸார் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.


இந்த சம்பவம் காலை 4:20 மணியளவில் ஹைவே 8 மற்றும் ப்ருட்லேண்ட் வீதிகளுக்கு அருகாமையில் நடந்ததாக கூறப்படுகிறது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் பல வாகனங்கள் சம்பவத்தில் ஈடுபட்டிருந்தன.

அவற்றில் இரண்டு வாகனங்கள் சம்பவ இடத்திலேயே காணப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குறித்த சிறுவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். சிறுவனின் ஆள் அடையாளம் இது வரை வெளிப்படுத்தப் படவில்லை.

துப்பாக்கிச் சூட்டுக்கு காரணம் என்ன என்பது இன்னும் தெளிவாகவில்லை.




## ஹாமில்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் அலுவலகம் (HPHS) தெரிவித்துள்ளது.

2019 ஜூலை 25 முதல் 2025 பெப்ரவரி 20 வரை, வைத்தியர் மெரெனிசா கோன்சாலஸ்-டியாஸ் வழிநடத்தும் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகள், முறையாக தொற்று நீக்கப்படாத சாதனங்களால் பாதிக்கப்படியிருக்கலாம் என தெரிவிக் கப்படுகின்றது.

தொற்று அபாயம் குறைந்த நிலையில் இருப்பினும், இந்தச் சாதனங்கள் ஹெபடைட்டிஸ் B, ஹெபடைட்டிஸ் C மற்றும் HIV போன்ற இரத்தத்தால் பரவும் நோய்களை பரப்பியிருக்க வாய்ப்பு உள்ளது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பல் சுத்தம் செய்யுதல், கிரவுன்கள், மறுசீரமைப்புகள், பல் பிடுங்குதல், போன்ற எந்தவொரு சிகிச்சையும் பெற்ற நோயாளிகள் இரத்தத்தால் பரவும் நோய்களுக்கு ஆளாகியிருக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.